



தனிச்சுற்றுக்கு மட்டும்

# மாத்தி யோசி" ஆனால் மறுக்காமல் யோசி

*தாழ்ச்சி, பணிவு, சுத்தம் என இணைந்து வரும் தவக்காலங்களில் "**மாத்தி யோசி**" **ஆனால் மறுக்காமல் யோசி** என்ற தவக்கால நேர் மறையான சிந்தனைத் தொகுப்பை உங்கள் முன் வைக்கின்றேன். காலம் காலமாக நமது கிறிஸ்துவ வாழ்வுமுறை நம்மை அநேகமாக, தேவைகளைத் தேடும் மனிதனாக, அஃது உலகலாவிய தேவையாகவோ, அல்லது ஆன்மீகத் தேவையாகவோ இருக்கும் " தேவைகள் தீராத மனிதர்களாக" உலகிற்கு அடையாளப் படுத்துகிறது.*

*நிறைவானவர் நம்முள் இருப்பது உண்மையானால், குறைவு உள்ளவர்களாக நாம் வாழக் கூடாது. ஆண்டவர் இயேசு தனது மூன்று ஆண்டுப் பொது வாழ்விலும் சரி, இதோ இந்தச் சிலுவைப் பாதை நிகழ்வுகளிலும் சரி எதிர் மறையான - தீமையானவற்றையோ, துக்கமானவற்றையோ ஏற்கவில்லை.*

*இயேசு நலமுடன் பயணித்த நாட்களில் கண்முன் நிறுத்தப்பட்ட விபச்சாரத்தில் கையும் களவுமாகப் பிடிபட்டுக் கல்லெறிந்துக் கொல்லப்பட வேண்டிய பெண்ணை அமைதியாகக் காப்பாற்றியது மட்டுமின்றி, நானும் தீர்ப்பிடேன் போ என அவள் **மீண்டும் வாழ** நல்ல சுதந்திரமான வாய்ப்பை உருவாக்கித் தந்தார் எனக் காண்கிறோம்.*

*சிலுவைத் துன்பத்தின் உச்சத்தில் தன்னை நோக்கி அழுதப் பெண்களுக்கு அவரும் அவர்களோடு துன்பப்படாமல் நிதானம் தவறாமல் நின்று அவர்களுக்கு ஆறுதல் தந்து அவர்களுடைய எதிர்கால விடியல் எது என்று சொல்லிக் கொடுக்கின்றார்.*

*நேர்மறையின் - நன்மைகளின் நாயகனாக வாழும் இறைவனின் மக்களான – நாம் மட்டும் ஏன் எதிர் மறை விளைவுகளுடன் துன்பத்துடன், துக்கத்துடன் வாழ வேண்டும். இறைவன் மனிதனுக்குத் தந்திருக்கும் சிறப்பே **அவனுடைய நிபந்தனை அற்றச் சுதந்திரமே –** எனவே தான் இன்பவனத்தில் இருந்த விலக்கப்பட்ட கனியானாலும் - கல்வாரியின் சிலுவை அன்பின் கனியானாலும் **கைகளில் எடுத்து உண்பதும், உண்ணாததும் மனிதனின் தனி உரிமை.** தேவாலயத்தைக் கள்வர் குகை ஆக்காதீர்கள் எனக் கோபப்பட்ட இயேசு கள்வனுக்கு வான் வீட்டை ஆர்வமுடன் அப்போதே தந்தார். திருத்தூதர் பவுல் அடிகளின் வார்த்தைப்படித் தேவ ஆலயத்தைத் தேவ ஆலயமாகவே வைத்திட இந்தத் தவக்காலம் நமக்கு உதவட்டும். நாம் தேவனின் ஆலயம் என்றால் நமக்குள் நேர்மையான சிந்தனைகளும் நன்மை நிறைந்த செயல்களுமே வலம் வர வேண்டும். **ஆம் மாத்தி யோசிப்போம்.***

*இப்படிக்கு*

*உங்கள் அயலான்*

*தொகுப்பு - A.C.டிசில்வா, புனித சூசையப்பர் பங்கு, வெலிங்டன், நீலகிரி - 9025029593*

## முதல் நிலை: இயேசுவைச் சிலுவைச் சாவிற்குத் தீர்ப்பிடுகிறார்கள்

திவ்ய இயேசுவே ………….

### ஒரே ஒரு வார்த்தை நமக்கு வாழ்வையும் சாவையும் தர வல்லது.

கெத்சமனேயில் ரபி என்ற யூதாஸின் ஒரு வார்த்தை இயேசுவைக் காட்டிக் கொடுத்தது, ஆனால் நண்பா என்ற இயேசுவின் அழைப்பு அவர் யூதாஸின் மீது கொண்ட நட்பை உறுதிச் செய்தது. “தேவ தூஷனம்” கூறினார் என்ற யூதத் தலைவர்களின் வாக்குப் பிலாத்துவின் முன் இயேசுவைக் குற்றவாளியாக நிறுத்தியது, மாறாகப் பிலாத்துவின் இதோ மனிதன் என்ற அறிக்கை அவரை இவரே மனிதன் என அடையாளப் படுத்தியது. கடந்த ஓய்வு நாளன்று ஓசன்னா என ஒலித்து இயேசுவை அரசராக்கிய யூத மக்களின் குரல்கள் இன்று பிலாத்துவின் முன் “சிலுவையில் அறையும் இவனைச் சிலுவையில் அறையும்” எனக் கூச்சலிட்டு இயேசுவின் சிலுவைச் சாவைப் பிலாத்துவின் அதிகாரத்தால் உறுதிச் செய்து தீர்ப்பிடச் செய்தது.

இறைமகன், வார்த்தை வடிவான இயேசுவின் வாழ்கையை வெறும் மனித வார்த்தைகள் அரசன் என வாழ்த்திக் குற்றவாளி என மாற்றியதைப் பார்த்தோம். மண்ணில் விழும் மனிதன் உயிரோடு இருப்பதை அவன் வாயினின்று புறப்படும் அம்மா என்ற வார்த்தைத் தான் உறுதிச் செய்கின்றது.

மனிதனாக வாழும் நாம் மீண்டும் மண்ணாக மாறாமல் இருக்க நமது வாயினின்று புறப்படும் ஒவ்வொரு வார்த்தைகளும் இறைமகனின் வாழ்வுத் தரும் வார்த்தைகளாக அனைவருள்ளும் வலம் வர உறுதிக் கொள்வோம். நானே உயிர் என்ற இயேசுவின் வார்த்தைகள் லாசரே வெளியே வா என அழைத்த போது லாசர் உயிர் பெற்றது போல இயேசுவையே உயிராகக் கொண்டுள்ள நமது வார்த்தைகள் நமக்கும் நம்மோடு இணைந்து வாழும் அனைவர்க்கும் நிறை வாழ்வைத் தரும் வார்த்கைளாக நித்தியத்திற்கும் ஒலிப்பதாக ……

செபம்:-

இறைவா!

எலும்பு இல்லாத எங்கள் நாக்கு எப்படி வேண்டுமானாலும் பேசாமல் என்றும் எல்லோரிடமும் உமது வார்த்தைகளை மட்டுமே பேசி .. அனைவருக்காக ஜெபித்திட வரம் தாரும்.

எங்கள் பேரில் ……………….

மாத்தி யோசி -1

## இரண்டாம் நிலை: இயேசுவின் மீது பாரச்சிலுவையைச் சுமத்துகின்றனர்

**திவ்ய இயேசுவே …………**

### *அன்புடன் சுமக்கும் எதுவும் சுமை அல்ல சுகமே*

**பாஸ்கா இரவு உணவிற்குப் பின் கெத்சமனே தோட்டத்தில் ஆண்டவர் இயேசு நுழையும் வரை - இந்தபாரச்சிலுவை, சிலுவை வழி வரும் மரணம் ஒரு கேள்விக் குறியாகத் தான் அவர் முன் நின்றது. கெத்சமனேயில் மண்டியிட்டு ஜெபித்து இறைச் சித்தமே என் சித்தம் எனத் தெளிவு பெற்ற பின் மனுக்குல மீட்பின் பாரச்சிலுவையின் சுமை – என் சுமை எளிது என்று அவரே கூறியதற்கு ஏற்ப சுகமானதாய் மாறிற்று.**

**நாம் நிற்கும் இந்த மண்ணிற்கு, பூமிக்கு, இந்த மனுக்குலமோ அல்லது அதன் மீதுள்ள வேறு எந்தப் படைப்புகளுமோ பாரம் அல்ல. வான் வெளியில் உலவும் கோள்களில் இந்தப் பூமிதான் மிகவும் சிறப்புடையது. இறைவன் தனது படைப்புகளால் அதன் செயல்களால் ஒவ்வொரு வினாடியும் இந்தப் பூமியைச் சிறப்பிக்கின்றார். இச்சிறப்பை என்றும் தன்னுள் தக்க வைக்க இந்த மண்ணுலகம் இறைச் சித்தத்திற்கு முழுமையாகக் கட்டுப்பட்டு இயங்குகிறது.**

**பூமியைச் சிறப்பிக்கும் இறைவன், பூமியை ஆளப்பிறந்த மனிதனைச் சிறப்பிக்காமல் இருப்பாரா? பாருங்கள் நமது – உடல் - உயிர், சுவாசிக்கும் காற்று, உண்ணும் உணவு இருக்கும் இடம்-எனக் கூறிக் கொண்டே போகலாம். இவை அனைத்தும் இறைவன் நமக்குத் தந்து படைப்புகளுக்குள் சிறப்பானவர்கள் என்ற பெருமைக்கு உரியவர்கள் ஆக்கினார்.**

**இப்படிப்பட்ட சிறப்புப் பெற்ற நாம் நமது கடமைகள், பொறுப்புகள் அனைத்தும் இறைச் சித்தத்தின் செயல்பாடுகள் என மனமுவந்து ஏற்கும் போது அவைகள் சுமைகள் அல்ல சுகங்களே என்பதை உணர முடியும். மனிதனாக வந்த இறைமகன் மேற்குறிப்பிட்ட மனநிலையில் நிலைத்து வாழ்ந்ததால் இறைவன் நிலையாக அவரோடு இருந்தார்.**

**அன்னை மரி மைந்தன் இயேசுவைப் போல் அன்னை மரியால் அவரது சகோதரர்களான நாமும் இந்த இறைச்சித்தத்தில் முழுமையாக இணைந்திட அழைக்கப்படுகின்றோம். இன்றே இணைவோம் - மகிழ்வுடன் சுமைகளை அல்ல சுகங்களைச் சுமப்போம் - பயணிப்போம் பரமனின் வழிதனில்.**

**செபம்**

*இறைவா*

*உம்மோடு இணைவதால் உமது சித்தத்திற்கு நாங்கள் கட்டுப்பட்டு வாழ்வதால் கண் முன் நிற்கும் சுகங்களை அடையாளம் கண்டு அவற்றுடன் இணைந்து வாழ்ந்திட அருள்தாரும்.*

**எங்கள் பேரில் ………………**

**மாத்தி யோசி -2**

**மூன்றாம் நிலை: இறைமகன் இயேசு முதல் முறைக் கீழே விழுகின்றார்.**
**திவ்ய இயேசுவே …………**

## தடுக்கி விழச் செய்யும் தடுமாற்றங்களைத் தகர்த்தெறிவோம்

இறைமகன் இயேசு மண்ணில் முதல் முறைக் கீழே விழுகின்றார். இது மிகவும் வேதனைக்குரிய ஒர் நிகழ்வு. மனுக்குலத்தின் மீட்பின் மீது இவர் கொண்ட அளவிட முடியா ஆர்வம் அல்லது தாகம் விழுந்த இவரை மீண்டும் எழுந்து நடக்கச் செய்தது…………

பலவீனப்பட்ட மனித வாழ்வில் தடுமாற்றங்கள் கண் முன் நிற்பது இயல்பு. ஆண்டவர் இயேசு ஒரு மனிதனைப்போல் 40 நாட்கள் பாலைவனத் தவவாழ்வை முடித்துப் பசியோடும், சோர்வோடும் களைப்போடும் நின்றபோது அலகை நேரம் பார்த்து அவர் முன் உணவு - அப்பம் , அந்தஸ்த்து - கடவுளின் மகன், உலகப் பெருஞ் செல்வம் அதன் அதிகாரங்கள் -உலக அரசுகள் என்பவைகளை – ஒரு சாதாரன மனிதன் தவிர்க்க இயலாத வாய்புகளை வைக்கின்றது. இறைவனின் - மகனாக வாழும் இயேசு அலைகையை எப்படித் தவிர்த்தார் என்பதை மத்.41:4ல் தெளிவாக நாம் படித்துள்ளோம்.

இறைமகன் வளர்ப்புத் தந்தை யோசேப்புக்கும் இந்தத் தயக்கம் வேண்டுமா வேண்டாமா என்ற தடுமாற்றம் சமூககௌரவம் வழியாக வந்தது. மரியாளை ஏற்பதா வேண்டாமா என்று நின்றபோது கனவிலும் இறைவனுடன் இணைந்து இருந்ததால் தெளிவுப் பெற்று மரியாளின் கரம் பற்றினார்.

இந்த வேண்டுமா – வேண்டாமா ? என்ற கேள்விகள், இன்னும் சற்றுக் கவனமா இருந்திருந்தால் என்ற கவலைகள், செய்யலாமா – செய்யக் கூடாதா? என்ற யோசனைகள், நடக்குமா – நடக்காதா என்ற சந்தேகங்கள் நமது முன் நிற்க - நாம் அனுபவித்த அல்லது அனுபவிக்கின்ற சிறு சோம்பேறித்தனமே காரணம் ஆகிறது.

மேலும் இந்த விஞ்ஞான வளர்ச்சியின் வளங்கள், இன்று நம்மை மீண்டும் மீண்டும் சுகபோகத் தேடல்களில் தள்ளி, விழச் செய்கின்றது. வீழ்ந்த நாம் எனக்கு ஒரு கண் போனாலும் சரி - அடுத்தவனுக்கு இரண்டும் போக வேண்டும் என்று நினைப்பது சரியா? அது மட்டுமல்ல நாம் வீழ்ந்தால் நம்முள் வாழும் இறைமாட்சியும் வீழும் என்பதை மறக்கலாமா? நமக்காக இல்லையென்றாலும் இறைவனுக்காக எழுந்திட முயற்சிப்போம்.

ஏனெனில் தனி மனித அடையாளமே – நிமிர்ந்து நிற்பதும் தொடர்ந்து நடப்பதும்தான்
செபம்

இறைவா

எங்கள் முழுமையான தேடல் நீயாக மட்டுமே அமைந்திடத் தடுமாற்றம் இன்றித் தயக்கம் இன்றி உம்மோடு கரம் கோர்த்திட வரம் தாரும்.

எங்கள் பேரில் ………………

மாத்தி யோசி -3

**நான்காம் நிலை: அன்னை மரியாளை ஆண்டவர் இயேசு சந்திக்கின்றார்.**
**திவ்ய இயேசுவே ............**

## உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம்

**இறைதூதர் கபிரியேல் - கன்னிமரியாள் சந்திப்பு - இம்மானுவேலனைத் தந்தது. கன்னிமரி எலிசபெத் அம்மாள் - சந்திப்பு – எலிசபெத் அம்மாளையும் - குழந்தையையும் ஆவியின் ஆட்கொள்ளச் செய்தது. அன்னைமரியும் - இயேசுவும் கானாவூரில் சந்தித்தனர். திருமண வீட்டார் மகிழ்ச்சியால் நிறைவுப் பெற்றனர். ஒரு வேளை இவர்கள் இறை அருள் பெற்றவர்கள் என்பதால் இப்படி நடந்திருக்குமோ!**

**பாருங்கள் சாதாரண மனிதன் - வரித்தண்டும் - சக்கேயு - இயேசுவைச் சந்தித்தார். அவனும் அவன் வீட்டாரும் மீட்புப் பெற்றனர். கெத்ஸமனேயில் யூதாஸ் - இயேசுவைச் சந்தித்தார். நண்பா என்று அவரால் அழைக்கப்பெற்றார். அதிகாரம் பெற்ற சவுல் தமஸ்கு பயணத்தில் ஆண்டவரைச் சந்தித்தார் - பிற இன மக்களின் திருத் தொண்டரானார் .**

**இதோ தாயும் - சேயும் மரணப் பாதையில் சந்திக்கின்றனார். ஒருவர் மற்றொருவருக்கு ஆறுதலும் தேறுதலும் தந்தவர்களாக இறைச்சித்தத்திற்குத் தங்களைக் கையளிக்கின்றனர் – உலகம் மீட்பால் மகிழ்கின்றது.**

**சந்திப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் நடுவில் இறைவன் இருந்தால் அந்தச் சந்திப்புகள் நிறை மகிழ்வை அனைவருக்கும் தருகின்றது. இன்று நொடிப்பொழுதில் நினைக்கும் நபரை உலகின் மறுமுனையில் இருந்தாலும் சந்தித்துப் பேச வசதிகள் நமது கைகளில் உண்டு. யோசிப்போமா அப்படி நாம் சந்திக்கும் நிகழ்வுகளின் பயன்கள் யாருக்குக் கிடைக்கின்றது! நமக்கா, அயலானுக்கா அல்லது அலகைக்கா! கவனிக்க வேண்டிய செயல். ஏனெனில் நாம் நம்மை இறைமக்கள் என்று கூறுவதில் பெருமை கொள்கிறோம்.**

**லாசர் இறந்து அழுகுகின்ற நிலையில் கட்டுண்டுக் கல்லறையில் கிடந்தான். இயேசு கல்லறை வாயிலில் சந்திக்க வந்தார். லாசர் வாழ்வு பெற்றான். நாம் முடிவெடுக்க வேண்டிய தருணம் இது நாம் லாசரா? இயேசுவா?**

**லாசர் என்றால் பாருங்கள் இயேசு ஆண்டவர் நம் முன் நிற்கின்றார். ஏற்றுக் கொள்வோம், வாழ்வுப் பெறுவோம். இல்லை நாங்கள் இறைமக்கள் - கிறிஸ்து அவர்கள் என்றால் கண் முன்னே வாழ்வைத் தேடும் ஆயிரம் லாசர்கள் நம்மை அழைக்கின்றார்கள். துணிவோம் அவர்களுடன் இணைவோம், ஆண்டவரில் மகிழ்வோம்.**

**செபம்**

இறைவா

உறவோடு வாழும் உள்ளங்கள் நடுவில் தெய்வம் தரிசனம் என்ற வரிகளுக்கு ஏற்ப எங்களிடையே நிகழும் சந்திப்புகளின் நடுவில் உமது தரிசனத்தைக் காணும் பாக்கியத்தை எங்களுக்குத் தாரும்..

**எங்கள் பேரில் ..................**

**மாத்தி யோசி -4**

**ஐந்தாம் நிலை: சிமியோன் இயேசுவிற்குப் பாரச் சிலுவையைச் சுமக்க உதவுகின்றார்.**

**திவ்ய இயேசுவே …………**

***தோள் கொடுப்பான் தோழன்***

**மத்தேயு 27 32, மாற்கு 15:21-ல் நாட்டுப்பறாத்தானானச் சிமியோன் சேவகர்களின் கட்டாயத்தால் இயேசுவின் சிலுவையைச் சுமந்தார் என வாசிக்கின்றோம். மாற்கு 5:41-ல் யாராவது உங்களை ஒரு கல் தொலைவு அவருடன் வரக் கட்டாயப்படுத்தினால் நீங்கள் அவரோடு இருகல் தொலைவு செல்லுங்கள் என இயேசு கூறுகின்றார். பவுல் அடிகளாரோ அவர் செயல் பற்றி 1கொரி 9:16-ல் நான் நற்செய்தியை அறிவிக்கின்றேன் என்றாலும் இதில் பெருமைப்பட ஒன்றுமில்லை, இதைச் செய்ய வேண்டிய கட்டாயம் எனக்குள்ளது என்று கூறுகின்றார். இந்த மூன்று நிகழ்வுகளும் கட்டாயத்தால் நிறைவேறினாலும் முடிவு மகிழ்ச்சியையும் நன்மையையும் தந்ததை நாம் உணர முடியும்.**

**இன்றைய வாழ்க்கைமுறையில் எல்லா அமைப்பு வாழ்க்கை முறைகளிலும் இந்தக் கட்டுபாடுகள், நிர்பந்தங்கள், நிபந்தனைகள் அனைத்தும் கேள்விக்குறியாக நிற்கின்றது. எல்லோருக்கும் எப்போதும் தேவைப்படுவது நிபந்தனை, கட்டுபாடுகள் இல்லாத சுதந்திர வாழ்வு - இத்தகைய வாழ்வு எத்தகைய முடிவுகளைத் தந்து கொண்டு இருக்கின்றது என்பதை நாம் தினமும் குறிப்பாகக் குடும்பங்களில் பெற்றோர் பிள்ளைகள் உறவில் எத்தகைய குழப்பங்களை இந்த மனநிலை உருவாக்குகின்றது என்பதைப் பார்க்கின்றோம்.**

**நமது பிறப்பும் - இறப்பும் - பெற்றோரும் நமது கைகளில் இல்லை. உறவும், ஊரும் பேசும் மொழியும் நமது விருப்பப்படி இல்லை – சுகமும், நோயும் நமது எண்ணப்படி நம்முடன் இருப்பதில்லை. பதவியும், பெருமையும் அந்தஸ்தும் பார்த்தவுடன் நம்முடன் வருவதில்லை இவையனைத்தையும் இறைவனும் இயற்கையும் நம்முன் நிறுத்துகின்றனார்.**

**வாழ்வு வேண்டுமெனில் சிமியோனைப் போல் வந்ததை வரவேற்கத்தான் வேண்டும். சிலுவையைச் சுமக்க இயேசு தளர்வுற்றபோது மறுபக்கத்தில் சிமியோன் தோள் கொடுத்துச் சிலுவைப் பாரத்தை ஏற்று இயேசுவிற்குத் தோள் கொடுக்கும் தோழன் ஆனார் எனச் சரித்திரம் கூறுகின்றது. ஆம் நாம் ஓர் அடி எடுத்து வைத்தால் நம்மோடு நம் இறைவன் இரண்டு அடி வருகின்றார் என்பதை இனி மறுக்காமல் இறைவனும் இயற்கையும் நம்முன் நிறுத்தும் கட்டாயமான நிர்பந்தமான கசப்பான வாழ்வாக இருப்பினும் உவப்புடன் எதிர்கொள்வோம்.**

**செபம்**

*இறைவா*

*நாங்கள் உமது விருப்பப்படி ஒரு கல் தொலைவு அல்ல. இரண்டு கல் தொலைவு நடந்திட எங்களை வழிநடத்தும்.*

**எங்கள் பேரில் ………………**

**மாத்தி யோசி -5**

**ஆறாம் நிலை: இறைமகன் திரு முகத்தை வெரோணிக்காள் துடைக்கின்றாள்.**

**திவ்ய இயேசுவே …………**

***துணிச்சல் ஆம் நன்மையைத் தேடும் துணிச்சல் இன்று நமக்குத் தேவையான துணிச்சல்.***

**ஆண்டவரின் திருமுகத்தை உலகிற்கு அடையாளப்படுத்திய பெருமை இந்த வெரோணிக்காள் என்ற புனிதவதியையே சாரும். இயேசுவின் இரண்டாம் கட்டளையான உன்னைப்போல் உன் அயலானை நேசி என்பதை அவள் அறியாத நிலையிலேயே அன்றைய வாழ்க்கைச் சூழலில் அதுவும் படைவீரர்களின் பாதுகாப்பு வளையத்தினுள் நுழைந்து ஆண்டவரின் முகம் துடைக்க மேற் கொண்ட துணிச்சல் அசாத்தியமானது, அதிசயமானது.**

**இதே துணிச்சலை ஒரு பெண்மணி ஆண்டவர் இயேசு முன் நிகழ்த்துகின்றார். யோவானைத் தவிர மற்ற மூன்று நற்செய்தியாளர்களும் குறிப்பிடும் அந்த 12 வருடப் பெரும்பாடு உள்ள அந்தப் பெண்மணிக் கூட்ட நெரிசல் இடையே இயேசு போவதைப் பார்க்கிறாள். அவர் குணமளிக்க வல்லவர் என்பதைக் கேட்டறிகின்றாள் தன் நலன் கருதி இயேசுவின் ஆடை விளிம்பைத் தொட்டாவது நலம் பெறுவேன் என உறுதிக் கொள்கிறாள். இதற்காக அவள் கொண்ட துணிச்சல் முன் அவளுடைய வியாதி, அந்தப் பெருங்கூட்டம் மறைய - முண்டியடித்துக் கொண்டு பெருங்கூட்டத்தினுள் நுழைந்து ஆண்டவரின் ஆடை விளிம்பைத் தொட்டாள். நலம் பெற்றாள். அது மட்டுமா ஆண்டவர் இயேசுவிடம் இருந்து மகளே துணிவோடு இரு. உன் நம்பிக்கை உன்னைக் குணமாக்கியது என்ற வாழ்த்தும் கிடைத்தது. (மத்தேயு 9:22).**

**சுவர் இருந்தால் தானே சித்திரம் வரையமுடியும் நாம் நன்றாக, நலமாக இருந்தால் தானே அயலானையும் நலமாக வைக்க முடியும். நமது நியாயமான உரிமைகளுக்காக, தேவைகளுக்காகச் செயல்படத் துணிச்சலை வளர்த்துக் கொள்வோம். போராட்டமும், பகைமையும், சூழ்ச்சியும் நிறைந்த உலகில் நமது தேவைகளைத் துணிந்துப் போராடிப் பெற்றுக்கொள்ளத் தயங்கினால் வாழ்க்கையின் முடிவுத் தோல்வியும் விரக்தியுமாகவே இருக்கும். எனவே வெரோணிக்காளின் துணிச்சலை மட்டுமில்லாது, 12 வருடப் பெரும்பாடுள்ள பெண் அவளது கண்முன் நிறைவேறினக் கால நிகழ்வுகளுக்கு ஏற்பச் செயல்பட - புத்திக் கூர்மையுடன் திட்டமிட்டு - கையெடுத்த துணிச்சலை நமதாக்குவோம். ஆண்டவர் இயேசுவின் வாழ்த்து நமக்கும் கிடைக்கட்டும்.**

**செபம்**

இறைவா

துணிச்சலுடன் செயல்படும் போது மட்டுமே உம்மைத் தொட முடியும் என்ற உண்மையை எங்கள் உயிரோட்டம் ஆக்கி, உம்மிடம் நற்சான்றுப் பெறும் சாட்சிய வாழ்வைத் தொடர அருள் தாரும்.

**எங்கள் பேரில் ………………**

**மாத்தி யோசி -6**

**ஏழாம் நிலை: ஆண்டவர் இயேசு இரண்டாம் முறைக் கீழே விழுகிறார்.**
**திவ்ய இயேசுவே ............**

## *வெறுப்பை விட்டுவிட்டு அன்பு செய்ய விரும்புவோம்*

**ஆண்டவர் இயேசு இரண்டாம் முறை மண்ணில் விழுகின்றார். அவர் விழக் காரணம் நமது பாவங்கள் என நாம் அறிவோம். பாவத்தை விட்டு விட முதலில் வெறுப்பை விட வேண்டும். வெகுளி, சினம் இரண்டும் வெறுப்பிற்கு உரியவை எனச் சீராக் 27:30 கூறுகின்றது. வெகுளித்தனத்தால் நாம் பாவிகள் ஆகின்றோம். சினத்தால் பிறருக்குப் பாவம் இழைக்கின்றோம் காயீனின் சினம் ஆபேலைக் கொன்றது.**

**கடவுள் தன் படைப்பு அனைத்தையும் பார்த்து அவை மிகவும் நன்றாக இருந்ததெனக் கண்டார்.(தொ.நூ:1:13) ஆனால் மனிதன் தன் பார்வையில் தீயனபலக் கண்டான். அவன் நல்லவனாக வாழத் தீயவைகளை முழுவதும் விலக்கி வாழ அவைகளை வெறுக்கத் தொடங்கினான். குழந்தைப் பருவம் முதல் இன்று வரை வெறுப்பைக் கற்றுத் தருகின்றான். பார்க்காதே, பழகாதே, தொடாதே எனத் தன்னையும் தன் வழித்தோன்றல்களையும் அவைகளிடமிருந்து விலக்கி வைக்கிறான். – விளைவு**

**வெறுப்பு எனும் நஞ்சு வளர்ந்து மரமாகிச் சினம், காய்மகாரம், அழுக்காறு, கொலை வெறி, ஆணவம், இறுமாப்பு போன்ற தீயகனிகளைத் தரும் போது தன்னோடு ஊடுருவியுள்ள வெறுப்பெனும் நஞ்சை வெட்டவும் முடியாமல் விலக்கவும் முடியாமல் தவிக்கின்றான்.**

**தன்னையே வெறுக்கத் தொடங்குகின்றான். உறவுகளின் நடுவில் விரிசல் விழுவது இந்த வெறுப்பால்தான். பொது நலம், இல்லறம், துறவறம் என எத்தகைய வாழ்க்கை அமைப்பு முறைகளானாலும் எப்போது வெறுப்பு - இந்த அமைப்புகளில் வேறுன்றுகிறதோ அப்போதே பிரச்சனைகள் பிறக்கத் தொடங்குகின்றன. தீயக் கனிகள் அறுவடையாகின்றன.**

**திருமண அருட்சாதனத்தில் அருள்பணியாளர் – மணமக்களிடம் நீங்கள் இருவரும் உங்கள் விருப்பப்படி இணைந்து வாழ விரும்புகிறீர்களா? என்று கேட்பார் – அவர்கள் ஆம் இணைந்து வாழ விரும்புகின்றோம் எனப் பதில் தருவார். இணைப்பு விரிசலை - வெறுப்பை அழிக்கின்றது. அன்பை வளர்கின்றது. ஊதாரி மைந்தன் தந்தையின் அன்பினால் அவரோடு இணைந்த பின்தான் திருந்திய மைந்தனானான் . அன்பே ஒருவரைத் திருத்தும் - வெறுப்பு அல்ல.....**

**வெறுப்பை அழிப்போம், இணைப்பில் நிலைப்போம் - அஃது இறைவனோடு என்றாலும் சரி, சக மனிதர்களோடு ஆனாலும் சரி.**

**செபம்**

*தெய்வமே*

*அன்பின் இணைப்பில் வெறுப்பின் விபரீதத்தை அழித்திடவும் அரவணைப்பால் திருந்திய மைந்தர்களை உருவாக்கவும் அருள் பொழியும்.*

**எங்கள் பேரில் ..................**

**மாத்தி யோசி -7**

**எட்டாம் நிலை: யூதபெண்களுக்கு இயேசு ஆறுதல் கூறுகின்றார். திவ்ய இயேசுவே …………**

***தானத்தில் சிறந்தது நிதானம்.***

லூக்கா:23:27-32 ல் இயேசு யூத பெண்களுக்கு ஆறுதல் கூறிய நிகழ்வுத் தெளிவாக விவரிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்ச்சிக்கும் நிதானத்திற்கும் என்ன சம்பந்தம் என்கிறீர்களா? நாமும் இந்த இயேசுவைப் போன்று செயல்பட ஆசைப்படுகிறோம் அல்லவா! கவனிப்போம்.

கவனியுங்கள்:-

(1) மரணத்தின் விழிம்பிலும் தன் நிதானத்தை இயேசு இழக்காமல் இருந்ததால் யூத பெண்களின் அழுகுரலைக் கேட்க முடிந்தது. (2) சவுக்கடிகள் பாரமான சிலுவை, கரடுமுரடான பாதை - இத்தனைக்கும் நடுவிலும் அவர் நிதானத்தோடு இருந்ததால் நின்று அழும் பெண்கள் பக்கம் திரும்ப முடிந்தது. (3) திரும்பியவர் நிதானமாக அவர்கள் ஏன் அழுகிறார்கள் என்பதை முழுமையாகக் கேட்டுப் புரிந்து கொள்ள முடிந்தது. (4) அதே நிதானத்துடன் தெளிவாக அப்பெண்களின் நிலையான ஆறுதலுள்ள வாழ்க்கைக்கான வழி முறைகளைக் கூறிச் செல்லவும் முடிந்தது.

இப்போது நம்மிடையே எங்குப் பார்த்தாலும் அவசரம், அவசரம், அவசரம் நம்முடைய சுய நலத் தேடல்களின் பொருட்டு, லாபங்களின் பொருட்டு வாழ்க்கை வசதிகளின் பொருட்டு நிதானத்தை "தானம்" செய்து வருடங்கள் கடந்து விட்டது உண்மையல்லவா? அன்று இயேசு இப்பெண்களைச் சந்தித்தபோது கொடூரமான மரண வேதனைகளில் இருந்தார். ஆனால் நாமோ இன்று அவரைவிட ஆயிரம் மடங்கு நலமாக இருக்கின்றோம் "உண்மைதானே" வாருங்கள் இயேசுவைப் போன்று நிதானத்துடன் நமது செவிகளைத் திறந்திடுவோம், நிதானத்துடன் பிறருக்காக நின்று அவர்களுடன் உறவை வளர்ப்போம். உறவில் நம் குரலை விட அவர்கள் குரலுக்குச் செவிக்கொடுப்போம். முடிவாக அனைவரும் நிறைவாழ்வுப் பெற நிதானமாகச் செயல்படுவோம்.

இன்று இறை அருள் நாம் குறைவாகப் பெற இந்த அவசரகதியே காரணம் - இறைவனைச் சந்திப்பதிலும், அவரோடு பேசுவதிலும் குறிப்பாக அவர் நம்மோடு பேசுவதையும் நிதானமாக, பொறுமையாகக் கேட்க மனம் உண்டு - ஆனால் நேரமில்லாதவர்களாக வாழ்கிறோம். தானத்தில் சிறந்தது நிதானம் அதை நாம் நம் இறைவனுக்குத் தந்தால் அமைதியான ஆறுதலுள்ள நிலைவாழ்வு நமதாகும்.

செபம்

இறைவா

எங்கள் அவசரத்தால் தொலைத்த உறவுகளை நிதானத்துடன் நின்று - தேடி - கண்டு அரவணைத்து அன்பையும் மகிழ்வையும் பகிர்ந்து நிலை வாழ்வைப் பெற்றிட வரம் தாரும்.

எங்கள் பேரில் ………………. மாத்தி யோசி -8

**ஒன்பதாம் நிலை: ஆண்டவர் இயேசு 3ம் முறை கீழ் விழுகின்றார்..**
**திவ்ய இயேசுவே …………**

## சாதாரன வரிதண்டுபவராக (ஆயக்காரனாக) மாறுவோம் ஆண்டவர் நம்மோடு

**ஆண்டவர் இயேசு மூன்றாம் முறை கீழே விழுகின்றார். இப்படி நினைத்துப் பார்க்கவே வேதனையாக உள்ளது - இப்படி நிகழக்காரணம் நமது இறை உறவில் விழுந்து இணைக்க முயற்சிக்காமல் நிலைக்கும் விரிசல்களே. கடவுள் தீயவர் தீயவராகவே வாழ வேண்டும் என்று விரும்பவில்லை. நாம் தான் அவருடன் உறவை புதுப்பிக்க முயற்சிப்பதில்லை. இதற்கு நம்முன் குடி கொண்டிருக்கும் பாவங்களின் ஆணிவேரான இறுமாப்பு- வேண்டாத கௌரவம் ஆணவம் - வீண் அகந்தை ஆகிய இவைதான் காரணம் என்பதே உண்மை.**

**தடுமாற்றத்தால் உள்ளத்தில் தோன்றிய தடைகள் வெறுப்பில் விருட்சமாகி நமக்குள் இறுமாப்பு, ஆணவம் என்ற தீய கனிகளை பழுத்து, முதிர்ந்த கனிகளாக தக்க வைக்கின்றது.**

**ஆண்டவர் ஏவாளிடம் ஏன் விலக்கப்பட்ட கனியை உண்டீர்கள் எனக் கேட்டபோது அவள் அமைதியாக நான் உண்ணவில்லை, அலகை என்னை கட்டாயப் படுத்தியதால் உண்டேன் என பதில் உரைத்தார். ஏவாள் உணர்ந்த நான் - என்ற உணர்வு அவளை நியாயப்படுத்தி அலகையை குற்றவாளி ஆக்கியது. அதன் பின் ஆதாம் தொடங்கி இதோ இங்குள்ள அனைவருள்ளும் இந்த "நான்" என்ற உணர்வு உயிரோடு இருக்கின்றது.**

**நான் என்ற இந்த உணர்வு இரு முனை கூர் கொண்ட கத்தியைப் போன்றது. இது பயன்படுத்தும் நபரைப் பொறுத்து பலன் தரும். ஜெபிக்கச் சென்ற பரிசேயன், மற்றும் வரிதண்டுபவர் வழியாக ஆண்டவர் தரும் விளக்கத்தைப் பாருங்கள். நான் பரிசேயன் என்ற ஆணவமும் இறுமாப்பும் கொண்ட ஆலயத்தினுள் நின்ற பரிசேயன் செபம் கேட்கப்படவில்லை. மாறாக நானோ பாவி என்று தாழ்ச்சியும் கீழ்படிதலும் கொண்டு ஆலயத்தின் வெளியில் நின்ற வரிதண்டுபவரின் ஆயக்காரரின் செபம் கேட்கப்பட்டது.**

**அன்னை மரியாள் கொண்ட நான் என்ற உணர்வு அவர்களை ஆண்டவரின் அடிமையாக்கி மனுக்குல மீட்புத் திட்டத்தின் அடித்தளமாக அடையாளப்படுத்தியது. நாமோ கிறிஸ்துவின் வழியாக அன்னைமரி மைந்தர்கள். ஒருவேளை மரியாளைப் போல் வாழ முடியாமல் இன்று வரை பரிசேயனாகவே வாழ்ந்தாலும், இனிமேல் கீழ் படிதலும் தாழ்ச்சியும் கொண்ட செபம் கேட்கப்பட்ட வரிதண்டுபவனாக ஆயக்காரனாக இறைவனின் முன் சாதாரன மனிதனாக முழந்தாளிட்டு தலை வணங்குவோம்.**

**செபம்**

இறைவா

கீழ்படிதலையும், தாழ்ச்சியையும் இரு முனை கூறாகக் கொண்ட மனிதநேய கத்தியை சிலுவை பலன்களை பகிர்ந்திட பயன்படுத்த பெலன் தாரும்.

**எங்கள் பேரில் ………………**

**மாத்தி யோசி -9**

## பத்தாம் நிலை இறைமகன் ஆடைகளை அகற்றுகிறார்கள்.

திவ்ய இயேசுவே …………

### *"உரிமையும் வெறுமையும் உம்மோடு இருக்க"*

தொ.நூ 3:10ல் ஆடையின்றி இருப்பது அச்சத்தை தந்தது என ஆதாம் ஒப்புக் கொண்டார். அப்படியானால் இரண்டாம் ஆதாமான இயேசுவின் நிலை எவ்வளவு கொடுமையானது. நாம் நமது உடல் வழியாக செய்யும் அனைத்து தவறுகளும் - நம் தேவனின் நிர்வாணத்திற்கு காரணம் என வருந்துகின்றோம். குறிப்பாக கற்பு - கன்னிமைக்கு எதிராக எழுப்பப்படும் அனைத்து வன்செயல்களின் பரிகாரத்திற்காக மன்றாடுகிறோம்.

இயேசுவின் முன் யோவான் 8:3-11-ன் படி கையும் களவுமாக விபச்சாரத்தில் பிடிப்பட்ட பெண் நிற்கிறாள் - அப்போது அவர் செய்தது முதலில் கல்லெறியும் கூட்டத்தினரிடமிருந்து அவளைக் காப்பாற்றினார். 2- வது மீண்டும் பாவம் செய்யாத சுதந்திர வாழ்வு அவள் வாழ வாய்ப்பு தந்தார். பாதிக்கப்பட்டோருக்கு பாதுகாப்பும், மறு வாழ்வும் தந்திட நம்மையும் அழைக்கிறார் – பயணிப்போம் வன்செயல் பாதிப்புகளை அகற்றிட. அடுத்து லூக்கா 9:25-ல் ஒருவன் உலகம் முழுவதையும் தனதாக்கினாலும் தன் வாழ்வை இழந்து விடுவானாகில் பயன் என்ன என்று கேட்கிறார்.

வாழ்வை இழக்காமல் இருக்க நல்ல உடலும் அவசியம் - எனவே இந்த உடலை சுறுசுறுப்பாக, சுத்தமாக, நோயற்றதாக, வலுவுள்ளதாக ஆரோக்கியமான அழகு கொண்டதாக வைப்பதும் நமது கடமைதான். இந்த உடல் இறைவன் வாழும் ஆலயம் என பவுல் அடிகளார் கூறுகின்றார். கானாவூர் திருமண வீட்டு கற்சாடிகள் போல் உறுதியுடனும் தூய்மையுடனும் வெறுமையுடனும் நமது உள்ளத்தை இறைவன் முன் திறந்து வைத்தால் அவர் தம் ஆவியால் நிறைத்து நாம் நிறைந்த பலன் தர ஆசி அருளுவார் – என்பதை மறந்திட வேண்டாம்.

மாற்கு 10:13-16 மற்றும் லூக்கா 18:15-17 –ன் படி விண்ணரசை உடமையாக்க குழந்தைகளைப்போல் கள்ளம், கபடம் அற்றவராக வெண்பனி போன்ற தூய்மையான உள்ளம் நமக்கும் வேண்டும் என நினைவு படுத்துகின்றார். நமது சுயநலவிருப்பு - வெறுப்புக்களை அகற்றி மாசுமறுவற்ற தூய உள்ளத்தை இறைவன் மட்டும் தங்கி வசிக்க தகுதியுள்ளதாக மாற்றிட மனம் வருந்தி வேண்டுவோம் - உன்னத பலிப்பொருளாக உன்னதர் பாதம் வைப்போம்.

செபம்

*இறைவா*

*நீர் எங்களுக்கு அளித்துள்ள உடல் நீர் வாழும் ஆலயம் என்பதை உணர்ந்து உமது ஆலயத்தை இழிவாக்கும் எச்செயலையும் செய்யாதிருக்க எனை நீர் ஆட்கொள்ளும்.*

எங்கள் பேரில் ………………

மாத்தி யோசி -10

**பதினோறாம் நிலை: இயேசுவைச் சிலுவையில் அறைகிறார்கள்.**
**திவ்ய இயேசுவே …………**

***இணைவோம் - சிலுவையில் - இணைவோம்.***

**ஆதியில் இறைவன் மனிதன் தணியாக இருப்பது நன்றன்று, அவனுக்கு சரி நிகரான துணையை உண்டாக்குவோம் என்றார். தொ.நூ 2:18. எந்தச் சூழலிலும் நாம் - இறைவன் - இயற்கை என இணைந்து வாழ்வதால் மட்டுமே உலகில் நிறைவை காணமுடியும். உலகம் நிறைவும் வளமும் பெற்றிட இறைமகன் இயேசுவும் மரம் போல் வாழும் மனிதர்களும் இணையும் காட்சியே இந்த சிலுவையின் காட்சி.**

**இன்று இறைவன் - மனிதன் - இயற்கை என்ற முக்கோணப் பரிணாம வாழ்வை மனிதன் வாழாமல் ஒன்று இறைவன் - மனிதன் அல்லது மனிதன் - மனிதன் அல்லது மனிதன் - இயற்கை என்று பிரிந்து வாழ்கின்றான். விளைவு முதலில் மனிதன் - இயற்கை என வாழ்பவன் தன் சுய லாபத்திற்காக மண்வளம், நீர்வளம், கனிமவளம் என இயற்கையை சூறையாடி தன்னுடைய எதிர்கால உலகை அழிக்கின்றான். இரண்டாவதாக மனிதனோடு-மனிதன் என்ற வாழ்வில் சுய நலம் - கௌரவம் - அந்தஸ்து என வாழ்ந்து சகல உறவுகளையும் இழந்து தனி மரமாக நிற்கின்றான்;. மூன்றாவதாக – முடிவாக இறைவன் - மனிதன் என்ற நிலைப்பாட்டில் தன்னை முழுவதும் இழந்தவனாக இந்த மனிதனை படைத்ததிற்காக நாம் மனம் வருந்துகிறோம் என்று இறைவனே கூறும் நிலைக்கு (தொ.நூ:6:6) அவரை வேதனைக்கு தள்ளுகிறான்.**

**நிர்கதியாக வேதனை மிகுந்த பிளவுகளால் தன்னந்தனியாக மரம் போல் இறைவனிலும் இயற்கையோடும இணையாத இரு புள்ளிகள் கொண்ட நேர் கோட்டைப் போல் வீழ்ந்து கிடந்த மனிதனை மூன்று புள்ளிகளால் முழுமை பெற்ற இறைவன் - மனிதன் - இயற்கை என்ற முக்கோண பரிணாம பரிசுத்த வாழ்வைப் பெற்றிட அன்பு, அரவணைப்பு, மன்னிப்பு என்ற மூன்று ஆணிகளால் இறைமகன் தன்னை மனுக்குல மரச்சிலுவையுடன் இணைத்துக் கொண்டார்.**

**ஆம் பயனற்ற நெடுமரமாக வீழ்ந்து கிடந்த மனிதனை நிமிர்ந்து கை விரித்து மன்னித்து அன்பு செய்து அரவணைக்கும் சிலுவை மனிதனாக - கிறிஸ்துவனாக உலகை ஆள அழைக்கின்றார். அழைப்பை ஏற்கலாமா ?**

**செபம்**

இறைவா

சிலுவை வெறும் மரமல்ல, அது அன்பு, மன்னிப்பு, அரவணைப்பு என்ற அமுதுகளை வாரி வழங்கும் அமுத சுரபி என்று புரிய வைத்தவரே எங்கள் கட்டுண்ட கைகளையும் கால்களையும் விரித்து உம்மோடு இணைந்து நிலைத்திட அருள்தாரும்.

**எங்கள் பேரில் ………………**

**மாத்தி யோசி -11**

**பனிரெண்டாம் நிலை இயேசு சிலுவையில் உயிர்விடுகின்றார்.**
**திவ்ய இயேசுவே …………**

**ஒவ்வொரு மனிதனும் கடவுளின் பிள்ளையாக வாழ அழைக்கப்பட்டவன்.**

**உலகின் அதிகாரத்தால் "இதோ மனிதன்" என அடையாளப் படுத்தப்பட்டவரோடு காலை 9 மணி முதல் மதியம் 3 மணி வரை வெறும் ஆறு மணி நேரம் மட்டுமே மதம் - சாதி – மொழி என எல்லாவகையிலும் வேறுபட்ட, ஆனால் உலக அதிகாரத்திற்கு கட்டுப்பட்ட நூற்றுவர் தலைவர் பார்வையில் "இயேசு" உள்ளபடியே நீதிமானாகவும் (லூக்கா 23:42), உண்மையாகவே இறைமகனாகவும் இருந்தார். (மத் 27:54) என்று விவிலியம் கூறுகிறது. ஆறு நாட்களில் படைப்புத் தொழிலை முடித்த இறைவன் அனைத்தும் நன்றாக இருந்ததெனக் கண்டார். ஆறு மணி நேரப் பயண முடிவில் நீதிமானாக இறைமகனாக இயேசு என்ற மனிதனை நூற்றுவர் தலைவர் நல்லவர் என அடையாளம் கண்டார்.**

**நூற்றுவர் தலைவர் இயேசுவில் கண்ட ஆறு சிறப்புகள்**

**1) வேதனையிலும் மரண பாதையிலும் யூத பெண்களுக்கு நிதானத்துடன் ஆறுதல் சொன்னது. (2) தன்னை அடித்து அவமானப்படுத்தி நிர்வாணப்படுத்திய சேவகர்களிடம் அமைதியாக தன்னை சிலுவையில் அறைய அனுமதித்தது. (3) அந்தரத்தில் நின்றபோதும் தந்தையே இவர்களை மன்னியும் - ஏனெனில் இவர்கள் தாங்கள் செய்வது இன்னதென அறியாது செய்கிறார்கள் என உருக்கமாகவும் உறுதியாகவும் மன்றாடியது. (4) இயலாமையிலும் இல்லை எனக் கூறாமல் "இருக்கிறவராகவே இருக்கின்ற தேவனாக" நல்ல கள்வனுக்கு வான் வீட்டைத் தந்தது. (5) நிற்கதியாக நிற்கும் தாய்க்கும் - அன்புச் சீடருக்கும் - மீண்டும் தாய் - மகன் உறவில் எதிர்கால நம்பிக்கையை வளரச் செய்தது. (6) உச்சமாக, உணர்வுகள் விடைபெறும் முன் தந்தையே உமது கரங்களில் எனது ஆவியை ஒப்படைக்கிறேன், என்று அர்ப்பண வாழ்வின் அடையாளமாக தன்னை மாற்றியது.**

**இந்த உயர்ந்த ஆறு பண்புகள் இருப்பதைக் காணும் நூற்றுவர் தலைவர் மட்டுமல்ல சாதாரண வழிப்போக்கனும் தலை வணங்குவான் இவர் உண்மையாகவே இறைமகன், நீதிமான், கடவுளின் மகன் என்று.**

**ஆறு மணி நேரம் பயணமே அறிக்கை இடும் போது….**

**பிறப்பு முதல் இன்று வரை அவரோடு பயணிக்கும் நாம் அவரைப்போல் உரக்கக் கத்தி இந்த இறைமகன் இயேசு உண்மையாகவே எங்கள் இறைவன் தான் என்று அறிக்கை இடுவோமா!!!**

**செபம்**

*விண்ணகத்தில் இருக்கும் எங்கள் தந்தையே…*

**எங்கள் பேரில் ………………**

**மாத்தி யோசி -12**

**பதிமூன்றாம் நிலை: அன்னை மரி மடியில் ஆண்டவர் உடலை வளர்த்துகிறார்கள்.**

**திவ்ய இயேசுவே ............**

## *வியாகுல அன்னை வளர்த்த விலையில்லா வாழ்வை தரும் குட்டித் திருஅவை*

அரிமத்தாவூர் யோசேப்பும், நிக்கதோமுவும் பிலாத்துவின் அனுமதியுடன் அங்கு இருந்த சீடர் மற்றும் நல்ல மனிதர்கள் துணையுடன் சிலுவையினின்று இயேசுவின் உடலை இறக்கி அங்கு இருந்த வியாகுல அன்னையின் மடியில் "ஆண்டவர் உடலை வளர்த்துகின்றனர்" என ஆதிமுதல் - தமிழ் திருஅவை அறிக்கையிடுகின்றது.

இறந்து போன உடலை மீண்டும் வளர்ப்பது – உயிரோடு வளர்ப்பது சாத்தியமா? ஆம் சாத்தியம் தான் அதுவும் இறை சித்தமே தன் வாழ்வாகக் கொண்ட அன்னைமரியாளுக்கு இது மிக மிக சாத்தியமான ஒன்றுதான்.

எப்போது ஒரு மனிதன் இறந்த பின் அவருடைய கொள்கைகள், போதனைகள், வாழ்கை நெறி முறைகள் மற்ற மனிதர்கள் நெஞ்சங்களின் ஊடுருவி நிலைத்து வளர்ந்து கொண்டே இருக்கின்றதோ அப்போது இறந்தவர் உயிரோடு வாழ்வதாக ஒப்புக் கொள்வது மரபு, இந்த மரபுப்படி – கல்வாரியில் இயேசு இறந்து விட்டதால் இனி யூதர்களுக்கு எந்த பாதிப்பும் இல்லை என நினைத்த யூதர்களின் நடுவில்,

ஆண்டவரின் உடலுடன் நின்ற வியாகுல அன்னை அவர்களையே திருஅவையின் அடித்தளமாக்கி, அன்பு, அரவணைப்பு, மன்னிப்பு என்ற சிலுவையை தலைமைப் பீடமாக்கி, இயேசுவின் சீடர்களையும் நல் நண்பர்களையும் களப்பணியாளர்களாக்கி இயேசுவின் கொள்கைகள், போதனைகள் வாழ்க்கை நெறி ஆகியவற்றை மக்கள் மத்தியில் உயிரோட்டமாக வளர்ந்திட உறுதி கொண்டு உருவாக்கினார் இந்த குட்டித் திருஅவையை. பின் நாளில் ஆவியின் அக்கினி அபிஷேகத்துடன் அனைத்து சீடர்களுடன் ஆலமரமாக வளர்ந்தது நிலைத்திட இப்போது அன்னை மரி நற்செய்தி எனும் நல்லவிதையை, நல்ல நிலமாக தன்னுடன் இருந்ததோர் உள்ளத்தில் உறுதியுடன் விதைத்தார். அனைவரும் ஆண்டவர் இயேசுவை இணைந்து வளர்த்தார்கள்

ஒளியுடன் இருளும் இருப்பது போல், நன்மைகள் நடுவில் தீமையும் வளருவதை நாம் காண்கிறோம். ஒவ்வொரு மனிதனும் ஒரு மறுகிறிஸ்து - ஒவ்வொரு குடும்பமும் ஒரு குட்டித் திருஅவை என்பதற்கிணங்க அன்னை மரியின் வாழ்கை முறைகளையும், நற்செய்தியான கிறிஸ்துவின் மதிப்பீடுகளையும் புதுப்பொலிவுடன் வளர்த்திட அனைவரும் உறுதி எடுப்போம் - உலகம் ஒளியில் பிரகாசிக்க நாம் எரியும் மெழுகு ஆகுவோம்.

செபம்

*இறைவா*

*சிலுவைவழி அன்னைமரி மக்களான நாங்கள் நற்செய்தியின் களப் பணியாளர்களாக களம் இறங்கிட கருணை பொழிவீர்களாக..*

எங்கள் பேரில் ..................



www.anbinmadal.org

## பதினான்காம் நிலை: இயேசுவை கல்லறையில் அடக்கம் செய்கின்றனர்.

**திவ்ய இயேசுவே …………**

## *கல்லறை ஒரு முடிவு அல்ல அது விண்ணக கனவுகளின் தொடக்கம்.*

யோவான் 1:1-ல் உள்ளது போல் - ஆதியிலே வார்த்தை இருந்தது, இந்த வார்த்தை இறைவனனோடு இருந்தது அதே வார்த்தை இறைவாகவும் இருந்தது. பின்நாட்களில் காலம் நிறைபெற்றபோது அந்த வார்த்தை மனு உருவாக நம்மோடு குடி கொள்ள வந்தபோது நாம் அவருக்கு தந்தது நமது உள்ளத்தையா ? அல்லது உயிரற்ற கல்லறையையா ?

இந்த அற்புத இறைவார்த்தைதான் ……. நமக்கு ……

இறைவனை அப்பா தந்தாய் என உயிரோடு, உறவோடு அழைக்க கற்றுத்தந்தது மனுக்குலத்திற்கு இறைகுலம் என்ற பெருமையைதந்து விண்ணரசில் இணைய அழைத்தது. காலம் நிறைவேறாதபோதும் திருமண வீட்டில் தாகம்தீர்த்தது, ஆயிரம் ஆயிரம் மக்களின் பசியை போக்க வயிராற உணவளித்தது. அண்டி வந்த அனைவருக்கும் நோய் நீக்கி சுகமும் ஆறுதலும் தந்தது. அலகையை அதட்டி மனிதர்களைவிட்டு விலகிடச் செய்தது. இறந்தவர்களையும் உயிர் பெறச் செய்து உண்மையோடு வாழ அழைத்தது. இறக்கும் தருவாயிலும் மன்னிப்பைத் தந்து மனுக்குலத்தை மீட்டது . இன்றும் - அன்பை விதைத்தது அகிலத்தை காக்கின்றது.

இவை அனைத்தையும் காட்சியாகவும், சாட்சியாகவும் அனுபவித்த மனிதர்கள் இப்போது கல்லறையை அந்த வார்த்தைக்கு தருகின்றார்கள். கல்லறையை அல்ல காலங்களையே கடந்த அந்த வார்த்தை இன்றும் கல்லறை ஒரு முடிவு அல்ல அது ஒரு புது வாழ்வின் தொடக்கம் என அன்பு கொண்ட உள்ளங்கள்; நடுவில் அன்பிற்குண்டோ அடைக்கும் தாள் என்று வலம் வந்து கொண்டு இருக்கின்றது.

திருப்பாடல் 46-ல் உள்ளது போல அமைதியுடன் இருந்து அந்த வார்த்தையை நமது அடைக்கலமும் பெலனும் என்று விசுவசிப்போம். எனவே என்ன நிகழ்ந்தாலும் அச்சமின்றி சிலுவைக் கொடியுடன் நமது வாழ்க்கைப் படகு அன்பு என்ற அலைகளின் நடுவில் மன்னிப்பு, அரவணைப்பு என்ற துடுப்புகளின் துணையுடன் அக்கரை என்ற வான் வீட்டை நிச்சயம் அடையும் என்ற அழியாத நம்பிக்கையுடன் முழந்தாளிடுவோம்.

**செபம்**

நிலையானவரே,

நித்திய தெய்வமே நாங்கள் அன்னை மரியின் மைந்தர்களாக, வார்த்தையின் சீடர்களாக இனி வரும் எங்கள் காலங்களை சிலுவைக் கொடியுடன் அமைதியுடன் கடந்திட நிறைவான உமது அருளை தந்தரும்.

**எங்கள் பேரில் ………………..**

**மாத்தி யோசி -14**